SC 42/2020 நாள் 21.07.2025

அ.சா.2 கண்ணன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ( எதிரி ஆஜர்).

1) போலீசார் என்னை சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். என்னை அ.சா.4 சுபாஷினி வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையின் போது சீதாலட்சுமி என்னை சத்தம் போட்டு அழைத்ததாகவும், என்னுடைய தோட்டத்தில் இருந்து சீதாலட்சுமி தோட்டத்திற்கு சென்றதாகவும், அப்போது அ.சா.1 ன் மகனான கண்ணன் இரத்தக் காயங்களுடன் காணப்பட்டதாகவும் நான் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில் காயமடைந்த கண்ணனுக்கு அந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று சீதாலட்சுமியிடம் நான் கேட்கவில்லை என்ற விபரத்தை போலீசாரிடம் கூறினேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை.

2) இறந்து போன கண்ணன் மீது காவல்நிலையத்தில் எத்தனை வழக்குகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு சிறிது காலத்திற்கு முன்னர் 2019 ம் ஆண்டு குற்ற வழக்கில் ஈடுபட்டதாக கூறி கண்ணன் சிறையில் இருந்த விபரம் பற்றி எனக்கு தெரியாது. என்னை கண்ணன் தாக்கியதாக கூறி காவல்நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. கண்ணன் ஊரில் பல பேரிடம் பிரச்சனை செய்து அவருக்கு கெட்ட பெயர் இருந்ததா என்று எனக்கு தெரியாது. முத்துராமலிங்கபுரம் கிராமத்தின் தெற்கு பகுதி சுமார் 4 கிமீ தொலைவில் கல்லூரணி கிராமம் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3) அருப்புகோட்டையில் இருந்து கமுதி செல்லும் பிரதான சாலையிலேயே முத்துராமலிங்கபுரம் கிராமம் அமைந்துள்ளது என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் ஆட்டோ மற்றும் லோடு ஆட்டோ வைத்திருப்பவர்கள் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அதே போல் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களிடம் கார் மற்றும் இரு சக்கர வாகனம் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 சீதாலட்சுமி என்னுடைய சின்னம்மா ஆவார். சம்பவ சமயத்தில் அவர் கைபேசி பயன்படுத்தி வந்தார். நான் அ.சா.1 ஆன எனது சின்னம்மாவிடம் நேரடியாகவும், கைபேசியிலும் பேசியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சின்னம்மாவிடம் பேசவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

4) அ.சா.4 சுபாஷினியிடம் கைபேசி உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கும் அருப்புகோட்டையில் இருந்து கமுதி செல்லும் பிரதான சாலையில் இருக்கும் முத்துராமலிங்கபுரம் கிராமத்திற்கு இடையே சுமார் 2 கிமீ தூரம் இருக்கும். போலீசார் என்னை அ.சா.4 சுபாஷினி வீட்டில் வைத்து விசாரித்த போது சம்பவ இடத்தை பார்வையிடலாம் என கூறி சம்பவ இடத்திற்கு போலீசார் என்னை அழைத்துச் செல்லவில்லை. ஆஜர் எதிரியின் தகப்பனரான அரசகுமாரின் தோட்டத்திற்கு கிழக்கு பக்கத்தில் தான் சம்பவ இடமான கண்ணனின் தோட்டம் அமைந்துள்ளது என்றால் சரிதான். இறந்து போன கண்ணன் அச்சமயத்தில் அவருடைய தோட்டத்தில் சேனை கிழங்கு சாகுபடி செய்தார் என்றால் சரிதான்.

5) சேனை கிழங்கு சாகுபடி செய்த இடத்திற்கு கிழக்கு பக்கத்தில் ஒரு கிணறும் ஆஸ்பிட்டாஸ் சீட் போட்ட ஒரு செட்டும் அதற்கு தெற்கே கண்ணனுக்கு சொந்தமான காடு இருந்தது என்றால் சரிதான்.

அரசகுமாரின் தோட்டத்திற்கு மேற்கு புறத்தில் ரோடு உள்ளது என்றால் சரிதான். ரோட்டிற்கு மேற்கே அரசகுமாரின் பருத்தி காடும், தேக்கு மரத்தோட்டமும் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய தோட்டம் ரோட்டிற்கு கிழக்கே அமைந்துள்ளது. கண்ணன் அவருடைய எந்த பகுதிக்கு செல்வதாக இருந்தாலும் எதிரியின் தகப்பனரான அரசகுமாரின் தேக்கு மரத் தோட்டத்தின் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அரசகுமாரன் அவருடைய தோட்டத்தின் வழியாக செல்ல கண்ணனுக்கு அனுமதி மறுத்தால் கண்ணன் கல்லூரணி வழியாக சுமார் 4– 5 கிமீ சுற்றி தான் அவருடைய தோட்டத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

6) சண்டை நடப்பதற்கு முன்னால் இறந்து போன கண்ணனை ஒரு போதும் அரசகுமாரோ, அவருடைய மகனான ஆஜர் எதிரியோ அவர்களுடைய காடு வழியாக செல்ல கூடாது என தடுத்தது கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பின்னரும் நான் என் காட்டிற்கு அரசகுமாரன் காடு வழியாக தான் செல்கிறேன் என்றும், அவர் என்னை தடுத்தது கிடையாது என்றும் சொன்னால் சரிதான். நான் தான் கண்ணன் காயமடைந்த விபரத்தை அ.சா.1 சீதாலட்சுமியிடம் சொன்னேன் என்றும், அதன் பிறகு தான் அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். நான் அ.சா.1 சீதாலட்சுமிக்கு தகவல் சொன்ன போது அவர் வீட்டில் தான் இருந்தார். அச்சமயம் காயமடைந்த கண்ணன் சுயநினைவுடன் அவருடைய கிணற்றுக்கு அருகில் அமைந்துள்ள ஆஸ்பிட்டாஸ் சீட் போட்ட செட் அருகே இருந்தார் என்றால் சரிதான். கண்ணன் தன்னுடைய கிணற்றில் குளித்துவிட்டு செட்டில் அமர்ந்திருந்தார் என்றால் சரியல்ல.

7) சம்பவ இடத்திற்கும் அ.சா.1 சீதாலட்சுமி வீட்டிற்கும் இடையே சுமார் 1.1/2 கிமீ தூரம் இருக்கும். அ.சா.1 சீதாலட்சுமியுடன் யார் யார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.42/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW5 |
| | | Defence |
| | | Court |
| Name | : வெங்கடேஸ்வரன் | |
| Father / Husband Name | : ராஜகுரு | |
| Village | : பிசிண்டி | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : ஜேசிபி உரிமையாளர் | |
| Religion | : இந்து | |
| Age | : 45 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 21.07.2025

முதல் விசாரணை :-

1) நான் தற்போது பிசிண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஜேசிபி இயந்திரத்தை வைத்து தொழில் செய்து வருகிறேன். இறந்து போன கண்ணன் என்னுடைய தகப்பனாரின் சகோதரியின் மகன் ஆவார். அ.சா.1 என்னுடைய அத்தை ஆவார். அ.சா.1 க்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள் ஆவார். இறந்து போன கண்ணனுக்கு திருமணம் ஆகவில்லை. மற்றொரு மகன் பெயர் யோகபாலன் ஆகும். அவர் ஏற்கனவே இறந்துவிட்டார். அவர்களுக்கு சொந்தமாக முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் தோட்டம் உள்ளது. இறந்து போன கண்ணனுக்கும், அவருடைய பெரியப்பா மகனான அ.சா.2 கண்ணனுக்கு அந்த தோட்டத்தில் உரிமை உள்ளது. ஆஜர் எதிரியை தெரியாது. இன்று தான் முதன் முதலில் பார்க்கிறேன். கடந்த 26.02.2019 ம் அன்று என்னுடைய அத்தையான அ.சா.1 சீதாலட்சுமி அவர்கள் மாலை சுமார் 04.30–05.00 மணிக்குள் எனக்கு செல் போன் மூலம் போன் செய்து தன்னுடைய மகனான கண்ணனுக்கு தோட்டத்தில் கிரு, கிரு நிலையில் இருப்பதாகவும், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாகவும், மருத்துவமனைக்கு என்னை வருமாறு கூப்பிட்டார்.

2) நான் அச்சமயம் காரியாபட்டியில் ஜேசிபி இயந்திரத்தை இயக்கி கொண்டு இருந்ததால் இரவு 08.00 மணிக்கு அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அச்சமயம் என் அத்தையான அ.சா.1 னிடம் விசாரித்த போது கண்ணனுக்கும், பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவருக்கும் சண்டை ஏற்பட்டு அதில் அடிபட்டு கீழே கிடந்ததாக கூறினார். நான் மருத்துவமனைக்கு சென்ற போது அவரின் உடலில் காயங்கள் இருந்ததா என்றால் அச்சமயம் அவர் இறந்துவிட்டதாக கூறி

அவரின் உடல் முழுவதும் துணி போர்த்தப்பட்டு இருந்தது முகத்தை மட்டும் பார்த்தேன். பக்கத்து தோட்டக்காரரின் பெயரை என் அத்தை கூறவில்லை. போலீசார் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளதால் பிரேதத்தை வாங்கி கொள்ளுமாறு கூறினார்கள். சம்பவத்திற்கு மறு நாள் காலை கண்ணனின் உடலை பிரேத பரிசோதனை முடிந்து பெற்றுக்கொண்டு நல்லடக்கம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ 1 புகாரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை கண்ணனின் பிரேதத்தை பெறுவதற்காக காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். இறந்து போன நபரின் குடும்பத்தில் வேறு ஆண் நபர்கள் யாரும் இல்லாததாலும், அ.சா.4 சுபாஷினி கை குழந்தை வைத்திருந்த காரணத்தினால் பிரேதத்தை பெறுவதற்காக நான் அ.த.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. புகாரில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. புகாரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இது சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

( **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து சாட்சியிடம் விசாரிக்க அனுமதி கோரப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டது.**)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

1) முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் என் அத்தையின் தோட்டத்திற்கு அருகில் அரசகுமார் என்பவருக்கு சொந்தமான தோட்டம் உள்ளது. சம்பவ நடப்பதற்கு 2 மாதத்திற்கு முன்பு அரசகுமாரின் தோட்டத்தில் வேலை பார்த்து வரும் அவரது மாமனார் அழகர்சாமி என்பவரும் , அரசகுமாரின் மகன் தமிழரசு என்பவரும் அவரது காட்டை உழுகும் போது கண்ணன்

பங்கிலும் சிறிதளவு உழுது விட்டதாகவும், இது சம்பந்தமாக என் அத்தை சீதாலட்சுமியும், அவரது மகன் கண்ணனும் அவர்களிடம் கேட்ட போது அழகர்சாமியும், தமிழரசும் சீதாலட்சுமியிடமும், கண்ணனிடம் வாய்தகராறு செய்தார்கள் என்று சொன்னதாகவும், பின்பு 26.02.2019 ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் காரியாபட்டியில் இ ருந்த போது முத்துராமலிங்கபுரத்தில் இருந்து என் உறவினர்கள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு 26.02.2019 ம் தேதி மதியம் என் அத்தை சீதாலட்சுமியும்,அவரது மகன் கண்ணனும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது கண்ணன் தோட்டத்தில் இருந்த தேவையில்லாத குப்பைகளை தீ வைத்துக்கொண்டிருந்த போது அந்த தீ அரசகுமாரின் தேக்கு மரக் காட்டில் உள்ள சருகில் பிடித்து எறிந்ததாகவும், இதனால் அழகர்சாமி அவரது பேரன் தமிழரசு ஆகியோர்கள் கண்ணன் மீது கோபப்பட்டு தேக்கு மரக்கட்டை, மண் வெட்டி கட்டையால் கண்ணனின் கை, கால்கள், வயிற்றில் பலமாக தாக்கி அவரை காயப்படுத்தி சென்றதாகவும், பின்னர் எனது அத்தை காயம்பட்ட கண்ணனை சிகிச்சைக்கு கொண்டு செல்ல வாகனம் கிடைக்காமல் தாமதமாக வாகனம் கிடைத்து அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்வதகாகவும், உடனே மருத்துவமனைக்கு செல்லுமாறு தகவல் சொன்னதின் பேரில் நானும், அரசு மருத்துவமனைக்கு இரவு 08.15 மணிக்கு சென்றதாகவும், அங்கு என் அத்தை, என் அத்தையின் பேத்தி சுபாஷினி, என் அத்தையின் உறவினர்கள்,போலீசார்களும் இருந்தார்கள் என்றும், நான் கண்ணனை பார்த்த போது கண்ணனின் வலது கை மணிக்கட்டு, இடது கை கீழ் புஜம், வலது முழுங்காலுக்கு கீழும், இடது கால் பெருவிரலிலும், இடது கை மணிக்கட்டிலும், இடது முழுங்காலுக்கு கீழும்

இரத்தக் காயங்களும், வலது பக்க அடி வயிற்றிலும் வீக்க காயமும் காணப்பட்டது என்றும், இரவு சுமார் 07.45 மணியளவில் கண்ணன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக எனது அத்தை என்னிடம் கூறினார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

என்னுடைய அத்தை என்னிடம் போன் மூலம் கண்ணன் கிரு, கிரு நிலையில் இருப்பதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.42/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW6 |
| | | Defence |
| | | Court |
| Name | : குருபாண்டி | |
| Father / Husband Name | : ரெங்கசாமி | |
| Village | : முத்துராமலிங்கபுரம் | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : விவசாயம் | |
| Religion | : இந்து | |
| Age | : 37 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 21.07.2025

முதல் விசாரணை :-

1) நான் தற்போது முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரிக்கு சொந்தமாக தோட்டம் உள்ளது. இறந்து போன கண்ணனின் குடும்பத்தாரை எனக்கு தெரியும். இறந்து போன கண்ணனும், அ.சா.2 கண்ணனும் பங்காளிகள் ஆவார்கள். அவர்கள் இருவருக்கும் பொதுவான கிணறு உள்ளது. விவசாய நிலம் தனித்தனியாக உள்ளது. கிணறு மட்டும் பொதுவாக உள்ளது. இறந்து போன கண்ணனுக்கும், ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் அருகே அருகே ஒரே பொழியில் தோட்டம் அமைந்துள்ளது. இறந்து போன கண்ணனும், அ.சா.2 கண்ணனும் எனக்கு மாமா முறையினர் ஆவார்கள்.

2) இறந்து போன கண்ணனுக்கும், எதிரியின் தகப்பனார் அரசகுமாருக்கும் முன் விரோதம் இருந்ததாக எனக்கு தெரியாது. கண்ணன் இறப்பு பற்றி என்ன தெரியும் என்றால் அ.சா.2 கண்ணன் என்னுடைய தாய் மாமா ஆவார். நானும், அவரும் ஒன்றாக விவசாயம் செய்கிறோம். அதன் பேரில் 2019 ம் ஆண்டு தேதி மற்றும் மாதம் நினைவில் இல்லை மாலை சுமார் 04.30– 05.00 மணிக்குள் நான் தோட்டத்திற்கு சென்ற போது அ.சா.1 சீதாலட்சுமி என்னை அழைத்தார். கண்ணன் அடிபட்டு கிடந்தார். அவரை ஆட்டோவில் நானும், அ.சா.1 , அ.சா.2 ஆகியோர் தூக்கி வைத்தோம். கண்ணனுக்கு 2 கைகள், வலது பக்க வயிற்று பகுதி, 2 கால்கள் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு இருந்தது. அவருக்கு அந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று நான் அ.சா.1 னிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1) அ.சா.2 கண்ணனுக்கும், இறந்து போன கண்ணனுக்கும் ஒரே காடு பாகம் பிரிக்கப்படாமல் உள்ளது. போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையின் போது 2019 ம் ஆண்டு தேதி மற்றும் மாதம் நினைவில் இல்லை மாலை சுமார் 04.30– 05.00 மணிக்குள் நான் தோட்டத்திற்கு சென்ற போது அ.சா.1 சீதாலட்சுமி என்னை அழைத்தார். கண்ணன் அடிபட்டு கிடந்தார். அவரை ஆட்டோவில் நானும், அ.சா.1 , அ.சா.2 ஆகியோர் தூக்கி வைத்தோம். கண்ணனுக்கு 2 கைகள், வலது பக்க வயிற்று பகுதி, 2 கால்கள் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு இருந்தது என்ற சங்கதிகளை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். போலீசார் விசாரணையில் 26.02.2019 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எங்கள் ஊர்க்காரர்கள் என்னிடம் வந்து 26.02.2019 ம் தேதி மதியம் என் மாமா கண்ணனும், என் பாட்டி சீதாலட்சுமியும் தோட்டத்தில் இருந்த போது கண்ணன் அவரது தோட்டத்தில் குப்பைகளுக்கு தீ வைத்த போது எதிரிக்கும், கண்ணனுக்கும் தகராறு ஏற்பட்டதாக சொன்னார்கள் என்று நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை.

2) கண்ணன் மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டதாக இரவு சுமார் 08.30 மணியளவில் ஊர்க்காரர்கள் என்னிடம் தகவல் சொன்னார்கள். அதன் பிறகு நான் அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் தோட்டத்திற்கு சென்ற போது கண்ணன் கிணற்று அருகே இருந்தார். ஆஸ்பிட்டாஸ் சீட் அமைந்திருக்கும் செட்டிற்கும் கிணற்றுக்கும் இடையே சுமார் 100 மீ தூரம் இருக்கும். நான் தோட்டத்திற்கு சென்று கண்ணனை பார்த்த போது சுமார்

மாலை 04.30 – 05.00 மணி இருக்கும். தோட்டத்திற்கு சென்று சுமார் 5 முதல் 10 நிமிடத்திற்குள் ஆட்டோவில் கண்ணனை ஏற்றிவிட்டேன். நான் தோட்டத்திற்கு செல்லும் போதே ஆட்டோ இருந்தது. ஆட்டோ உள்ளூர் ஆட்டோவா அல்லது கல்லூரணி கிராமத்தைச் சேர்ந்த ஆட்டோவா என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் கூறியவாறு நான் தோட்டத்திற்கு செல்லவில்லை என்றும், கண்ணனை ஆட்டோவில் ஏற்றவில்லை என்றும் கேள்விப்பட்டு தான் மருத்துவமனை சென்றேன் என்று சொல்வது தவறு.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.42/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW7 |
| | | Defence |
| | | Court |
| Name | : முத்து | |
| Father / Husband Name | : சந்திரன் | |
| Village | : இலந்தைகுளம் | |
| Taluk | : கமுதி | |
| Caste | : | |
| Calling | : ஆடு மேய்ப்பவர் | |
| Religion | : இந்து | |
| Age | : 50 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 21.07.2025

முதல் விசாரணை :-

நான் தற்போது இலந்தைகுளம் கிராமத்தில் , பேரையூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். ஆடு கிடை போடும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் அரசகுமாருக்கு சொந்தமான இடத்தில் ஆட்டு கிடை போட்டிருந்தோம். எனக்கு உதவியாக முத்துவேல் என்பவர் உடன் இருந்தார். அவர் நார்த்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். 27.02.2019 ம் தேதி அதிகாலை நான் தூங்கிக் கொண்டிருந்த போது போலீசார் தோட்டத்திற்கு வந்தார்கள். எங்கள் முன்னிலையில் மேற்படி இடத்தில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும், முத்துவேல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் மேற்படி இடத்தில் 27.02.2019 ம் தேதி 01.15 மணிக்கு சம்பவ இடங்களில் காணப்பட்ட இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண், இரத்தம் பட்ட துண்டு ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். **இரத்தம் பட்ட மண் சா.பொ.3, இரத்தம் படாத மண் சா.பொ.4 மற்றும் இரத்தம் பட்ட துண்டு சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த அத்தாட்சியில் நானும், முத்துவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். அத்தாட்சி **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சொன்ன மாதிரி,சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் ஆட்டு கிடை எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், சொன்ன மாதிரி சொன்ன

நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் உங்கள் முன்னிலையில் எந்த பொருட்களும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும்,அதில் நீங்கள் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியது அனைத்தும் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.